செ.வெ.எண் : 71 நாள் : 25.06.2021

கோயம்புத்தூர் மாவட்டம்

**மாவட்ட தொழில் மையத்தின் மூலம் ஒற்றைச் சாளர முறையில் தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் பணியினை துரிதப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.**

******************

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்று (25.06.2021) மாவட்ட தொழில் மையத்தின் மூலம் ஒற்றை சாளர முறையில் தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் பணி தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் திரு.கார்த்திகைவாசன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இவ்ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்தாவது,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழக அரசின் வாழிகாட்டுதலின்படி, புதிய தொழில்களை ஊக்குவிக்கும் வகையிலும், தொழில் முனைவோர்களின் புதிய தொழில்களுக்கான அரசு அனுமதிகளை எளிமையாக்கும் வகையிலும் தொழில் துவங்குவதற்கு பல்வேறு அரசு அமைப்புகளிடம் அனுமதி பெறுவதை, ஒற்றைச் சாளர முறைக்கு மாற்றப்பட்டு பல்வேறு துறைகளின் அனுமதிகள் இணையத்தின் மூலம் ஒரே வழியில் அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அதன்படி, அனைத்து தொழில் முனைவோர்களும் தொழில் துவங்க ஒப்புதல்களை பெற ஒரு முனை இணையதளம் வழியாக மட்டுமே விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் / நிறுவனங்கள் பல்துறை உரிமங்களை (தீயணைப்பு துறை, தொழிற்சாலை பாதுகாப்புத் துறை, நகர்புற ஊரமைப்பு துறை , மின்இணைப்பு பெற, மாசு கட்டுப்பாட்டு வாரிய ஒப்புதல், எடை அளவீடு ) குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள்

பெறுவதற்கு www.tnswp.com/dic.gov/ என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

மாவட்ட அளவிலான ஒற்றை சாளர இடர்நீக்க குழு இந்த உரிமங்களை பெற்று தரும். பிற துறையினரும், தொழில் சார்ந்த விண்ணப்பங்களை நேரடியாக பெற்றுக் கொள்ளாமல் இணையதளம் வாயிலாகவே விண்ணப்பிக்கவேண்டும். இத்திட்டத்தினை தொழில் முனைவோர்களுக்கு zoom meeting வாயிலாகவுவும் பிற முறைகளிலும் ஊக்கப்படுத்தி விண்ணப்பிக்க வைக்க வேண்டும் என மாவட்ட தொழில் மைய அலுவலருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்துவதன் மூலம் தொழில்நகராக விளங்கும் கோவையில் மென்மேலும் பல்வேறு புதிய தொழில்கள் குறுகிய காலத்தில் எளிதாக துவங்க சிறப்பான வாய்ப்பாக அமையும் என **மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**